**Arbeiterwohlfahrt**
**Bundesverband e.V., Bonn**

# அரசியல் தஞ்சக்கோரிக்கைக்கான அறிவுறுத்தல்கள்

## Hinweise zum Asylverfahren

## TAMIL

## தமிழ்

Diese Broschüre ist kostenlos

Impressum

Diese Broschüre wird aus Zuwendungen des Bundesministeriums für Jugend, Familie, Frauen und Gesundheit gefördert.

Herausgeber und Bezug:

Arbeiterwohlfahrt Bundesverband e.V.
Oppelner Str. 130
5300 Bonn 1

Text und Übersetzung der Broschüre wurde vorgenommen von T. Yaganathan Putra, Stuttgart

Grafik: Peter Gautel, Karlsruhe

Druck: Druckerei Gerhards KG, Bonn

Auflage: 5 000

Oktober 1987



# அரசியல் தஞ்சம் கோருவோருக்கு தஞ்ச நடைமுறைபற்றிய முக்கிய குறிப்புக்கள்.

நீங்கள் மேற்கு ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளீர்கள். இனம், சமயம், குடியுரிமை அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகப்பிரிவைச் சார்ந்த அரசியல் காரணங்களுக்காக குற்றவாளியெனக் கருதப்பட்டு அரசாங்கத்தினால் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்த போதே ஜேர்மன் அடிப்படைச் சட்டத்தின்படி அரசியல் ரீதியாக வழக்குத் தொடரப்பட்டிருத்தல் எனக்கொள்ளப்படும்.

இங்குள்ள அரசியல் தஞ்ச நடைமுறைபற்றிய சில அடிப்படையான விடயங்களை நீங்கள் அறியத்தவறியிருப்பதை நாம் எமது அனுபவவாயிலாகக் கண்டுள்ளோம். எனவே ஒருசில புத்திமதிகளையும், அறிவுறுத்துரைகளையும் உங்கள் நன்மைக்காக கீழே தருகின்றோம்.

## I. உபயோகமான புத்திமதிகள்.

1. இந் நாட்டிலுள்ள அரசியல் தஞ்சத்திற்கான உரிமைகள்பற்றி அறிந்தவர்களிடம் தெளிவாகக் கேட்டறிந்து கொள்ளுங்கள். உங்கள் அறியாமையினால் சிலவேளைகளில் நீங்கள் சாதகமற்ற விளைவுகளையும் எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். பின்வரும் ஸ்தாபனத்தினர் உங்களுக்கு வேண்டிய தகவல்களைத் தருவதற்கு தயாராக உள்ளனர்.

   சர்வதேச மன்னிப்புச்சபை, நலன்புரிச் சங்கங்களின் ஆலோசனை நிலையங்கள், தேர்ச்சிபெற்ற சட்டத்தரணிகள் போன்றோர்.

2. உங்கள் அரசியல் தஞ்ச நடவடிக்கைகள் சட்டத்தரணி ஒருவரால் நடத்தப்பட்ட போதிலும் நீங்களும் அதில் தனியான கவனமெடுத்து அந்நடவடிக்கைகட்கு ஏற்றவாறு செயற்படுதல் அவசியமாகும்.

   தெளிவானதும் நம்பத்தகுந்ததுமான விடயங்களை கொண்டிருக்கும் உங்கள் தஞ்ச விண்ணப்பம் வெளிநாட்டவர் காரியாலயம் (A u s l ä n d e r a m t) உங்களைச் சரியாக இனங்காண்பதில் முக்கிய பங்கினை வகிக்கும்.

3. உங்கள் நாட்டைவிட்டு நீங்கள் வெளியேற வேண்டியதற்கான உங்கள் தனிப்பட்ட காரணத்தை விண்ணப்பத்தில் தவறாதவும் காலப்படி தெளிவாகக் குறிப்பிடுங்கள். உங்கள் அரசியல் ஈடுபாடு காரணமாக உங்களுக்குத் தனியாக இழைக்கப்பட்ட கொடுமைகளை எவ்வளவு தெளிவாகக் குறிப்பிடுகிறீர்களோ (உதாரணமாக நடைபெற்ற இடம், திகதி, பங்குபற்றியவை போன்றவை) அவ்வளவிற்குக் கூடுதலாக உங்கள் விண்ணப்பம் நம்பப்படுவதாக இருக்கும். ஒருமித்த அகதிகளாக்கப்பட்டதற்கான பொதுவான காரணங்கள் தனிப்பட்ட காரணங்களாகக் கொள்ளப்பட மாட்டா. சந்தேகத்திற்கிடமற்ற அத்தாட்சிப்பத்திரங்களான சான்றுகள், சத்தியக்கடதாசிகள், பத்திரி-

கைச் செய்திகள் போன்றவை உங்கள் விண்ணப்பத்திற்கு மேலும் சான்று பகர்வையாக இருக்கும்.

4. வெளிநாட்டவர் காரியாலயம், சமஷ்டிக் காரியாலயம் ( Bundesamt ) மற்றும் உங்கள் சட்டத்தரணி போன்றோரால் அனுப்பப்படும் அறிவித்தல்கள் அல்லது கடிதங்கள் உங்களுக்கு விளங்காமல் இருந்தால் அதனை விளங்கக்கூடியவர்களிடம் காட்டி அவற்றிலுள்ள விடயங்களை தெளிவாக அறிந்துகொள்ளுங்கள்.

5. உங்களுக்குத் தரப்படும் காலக்கெடுக்களை அசட்டை செய்து கவலையீனமாய் இராதீர்கள். சட்டத்தரணி ஒருவரை இன்னமும் நியமிக்காதிருந்தால் உங்கள் தனிப்பட்ட கடிதங்களை நீங்கள் இல்லாத நேரங்களில் கைஏற்கக்கூடியவாறு உங்கள் பிரதிநிதி ஒருவரை உத்தியோக பூர்வமாக நியமித்து வையுங்கள்.

6. உங்கள் வசிப்பிடத்தை அல்லது வீட்டை மாற்றிக்கொள்ளும்போது வெளிநாட்டவர் காரியாலயம், சமஷ்டிக் காரியாலயம், சட்டத்தரணி என்போருக்கு உங்கள் விலாசமாற்றத்தை மறக்காமல் உடனடியாக அறிவியுங்கள். நீங்கள் கொடுத்திருக்கும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படும் கடிதங்கள் நீங்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளத் தவறினும் அவை உங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டனவென்றே கருதப்படும். ஒரு வீட்டிலிருந்து மறு வீட்டிற்கு மாறிப்போகும்போது புதிய வீட்டு விலாசத்திற்கு உங்கள் கடிதங்கள் கிடைக்கும்படி செய்வதற்கான விண்ணப்பத்தினை தபால் காரியாலயத்திற்கு அனுப்பிவையுங்கள்.

## II. தஞ்ச நடைமுறையின் அடிப்படை அமைப்புக்கள்.

1982 ஆகஸ்ட் 1ம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தஞ்ச நடைமுறை விதியானது ஒருவரது தஞ்ச விண்ணப்பத்தினை ஏற்பதற்கும் அல்லது மறுத்து விடுவதற்கும் வழிவகுத்துள்ளது. மிகச் சிக்கலான இத்தஞ்ச நடைமுறையின் முக்கியமான சில அடிப்படை அமைப்புக்களை உங்கள் அறிவித்தலுக்காக கீழே தந்துள்ளோம்.

### 1. தஞ்சத்திற்கான விண்ணப்பம்.

தஞ்ச விண்ணப்பம் அந்தந்தப் பகுதியிலுள்ள வெளிநாட்டவர் காரியாலயத்தில் கொடுக்கப்படுதல் வேண்டும். வெளிநாட்டவர் காரியாலயத்தினரும் தஞ்ச விண்ணப்பமொன்று தகுதியானதோ அல்லது தகுதியற்றதோவென முடிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். எவராவது ஒருவர்,

- வேறொரு நாட்டில் நீண்டகாலமாக தங்கியிருந்தவராக இருந்தோ அல்லது
- வேறொரு நாட்டின் கடவுச்சீட்டை கொண்டிருப்பவராகவோ இருந்தோ

வேறொரு நாட்டில் தனது அரசியல் துன்புறுத்தலுக்குப் பாதுகாப்புப் பெற்றவராக இருந்தால்



அவரால் கொடுக்கப்படும் புதிய விண்ணப்பம் ("கவனத்திற்கெடுக்கப்படாத தஞ்ச விண்ணப்பம்" என்ற பிரிவின்கீழ்) மேற்கூறப்பட்ட உத்தியோகத்தர்களால் நிராகரிக்கப்படும். இவ்வாறு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்போது தஞ்சம் கோரும் ஒருவர் பாதகமான விளைவுகட்கு உள்ளாக நேரிடலாம். நாட்டை விட்டு வெளியேறுமாறு அவர் கோரப்படுவதுடன் அப்படி அவர் செய்யாதவிடத்து தனது சொந்த நாட்டிற்கு நாடுகடத்தப்படுவார். இப்படியான சந்தர்ப்பத்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரும் கட்டளை கிடைத்து 7 நாட்களுக்குள் நிர்வாக நீதிமன்ற ஒழுங்கு விதிகளின் சட்ட விதிமுறை : 80. பிரிவு 5ன் படி "கவனத்திற்குக் கொள்ளக்கூடிய" தஞ்ச விண்ணப்பமொன்று ( நாடு கடத்துவதற்கான நடவடிக்கையை நிற்பாட்டக் கோரும் விண்ணப்பமொன்று ) கொடுக்கும் பட்சத்தில் மட்டுமே ஒருவர் நாடுகடத்தப்படுதலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

### 2. தஞ்சத்திற்கான தீர்மானம்.

தமக்குக் கிடைத்த தஞ்ச விண்ணப்பத்தை வெளிநாட்டவர் காரியாலயமானது சமஷ்டிக் காரியாலயத்திற்கு அனுப்பிவைக்கும். தஞ்சம் கொடுப்பதுபற்றி சமஷ்டிக் காரியாலயமே தீர்மானிக்கும்.

### 2.1. தஞ்சம் - ஏற்றுக்கொள்ளப்படுதல்.

ஒருவர் தஞ்சத்திற்கு தகுதியுடையவராக ஏற்றுக்கொள்ளப்பட்டும் இம்முடிவிற்கு எதிராக அரசாங்கத்தின் பிரதிநிதியானவர் மனுச்செய்யாமலும் இருந்தால் அவ் விண்ணப்பதாரர் தஞ்சம் பெறுவதற்கான அந்தஸ்தைப் பெறுவார். தஞ்சம் பெறத்தகுதியானவர் எனக் காணப்பட்ட ஒருவர் காலவரையறையற்ற வசிப்பிட அனுமதியைப்பெற உரித்துடையவர் ஆகின்றார்.

### 2.2. தஞ்சம் மறுக்கப்படுதல்.

"உறுதிப்படுத்தப்படாத" அல்லது "தெளிவாக உறுதிப்படுத்தப்படாத" விண்ணப்பம் என்ற அடிப்படையில் ஒருவருடைய தஞ்ச விண்ணப்பத்தை சமஷ்டிக் காரியாலயமானது நிராகரிக்கலாம். இந் நிராகரிக்கப்பட்ட முடிவு நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரும் ஆணையுடன் விண்ணப்பதாரிக்கு அனுப்பிவைக்கப்படும். இவ் விண்ணப்பதாரர் குறிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தானே நாட்டைவிட்டு வெளியேறாது போனால் அவர் நாடுகடத்தப்படுவார்.

சமஷ்டிக் காரியாலயத்தினதும் வெளிநாட்டவர் காரியாலயத்தினதும் முடிவுகட்கு எதிரான முறையீடுகள் பொதுவான நிர்வாக நீதிமன்றமொன்றிலும் விசாரிக்கப்படும்.

-"உறுதிப்படுத்தப்படாத" தஞ்ச விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரர் தமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் அதனுடன் சேர்ந்த நாட்டைவிட்டு வெளி-

வெளியேறுமாறு கோரும் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற ஒருமாதகால இடைவெளிக்குள் தொடர்பான நிர்வாக நீதிமன்றத்தில் அந்த நிராகரிப்பை ரத்துச் செய்யும்படி கோரி முறையீட்டு மனுச்செய்யலாம். சட்டரீதியான இறுதிமுடிவு எடுக்கப்படும்வரையில் இம் முறையீட்டு மனுவின் காரணமாக நாடுகடத்தப்படுதல் பிற்போடப்படும்.

- " தெளிவாக உறுதிப்படுத்தப்படாத " தஞ்ச விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில் விண்ணப்பதாரியை மிக விரைவில் நாடுகடத்த இயலுமாகையால் இவ்விண்ணப்பதாரி நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரும் அறிவித்தல் தனக்குக்கிடைத்த ஒருவாரகால இடைவெளிக்குள் " நாட்டைவிட்டு வெளியேற்றலை பிற்போடும் நடவடிக்கைக்கான நிர்வாக நீதிமன்ற ஒழுங்குவிதி : 80 பிரிவு 5ன் " கீழ் நிர்வாக நீதிமன்றத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

சமஷ்டிக் காரியாலயத்தில் சாதகமற்ற முடிவிற்கெதிரான ( ஒருமாதகால இடைவெளிக்குள் ) முறையீடு செய்யப்படுவது பிரயோசனமானது மட்டுமல்லாமல் அவசியமானதும்கூட.

3. மேன்முறையீடு அனுமதியளிக்கப்படாததற்கான முறையீடு.

நிர்வாக நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டிருக்கும் பட்சத்தில் அந்நிர்வாக நீதிமன்றத்தின் சாதகமற்ற முடிவிற்கு எதிராக மேன்முறையீடு செய்தல் சாத்தியமாகும். மேன்முறையீடு செய்வதற்கு அனுமதியளிக்கப்படாமல் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் மேன்முறையீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்படாததற்கு எதிராக முறைப்பாடு செய்யப்படலாம். ஒருவரது முறைப்பாடானது " தெளிவாக அனுமதிக்கப்பட முடியாதது " அல்லது " தெளிவாக உறுதிப்படுத்தப்படாதது " என்ற அடிப்படையில் நிராகரிக்கப்படுமானால், அந்நபர் உடனடியாகவே நாட்டைவிட்டு வெளியேற்றப்படலாம்.

4. மீளாய்வு மனு ( திரும்பவும் செய்யப்படும் விண்ணப்பம் )

ஆரம்பத்தில் சமர்ப்பித்த விண்ணப்பத்தில் கொடுத்திருந்த காரணங்களைவிட மேலதிகமாக புதிய காரணங்கள் கொடுக்கப்படும் பட்சத்தில் மட்டுமே தஞ்சத்திற்கான மீளாய்வு மனுவானது ( திரும்பவும் செய்யப்படும் விண்ணப்பம் ) " கவனத்திற் " கொள்ளப்படும். நாட்டை விட்டு வெளியேறுமாறு கோரும் சட்டரீதியான கட்டளை வழங்கப்பட்டு 2 வருடங்கள் பூர்த்தியடைந்தும் இக்காலப் பகுதியில் விண்ணப்பதாரர் மேற்கு ஜேர்மனிக்குள் வசித்து வரும் பட்சத்தில் மட்டுமே அவ்விண்ணப்பதாரரை நாட்டைவிட்டு வெளியேற்றுவதோ இல்லையோ என்பதுபற்றி மீளாய்வு செய்யப்படும்.

1987 தை மாதத்தில் இருந்து ஒருசில புதிய ஒழுங்கு விதிகள் நடைமுறைக்குக் கொண்டுவரப்-



பட்டுள்ளன. அவ்விதிகளில் முக்கியமான சிலவற்றை மட்டும் உங்கள்அறிவித்தலுக்காக இங்கு தருகின்றோம்.

- சொந்த நாட்டைவிட்டு தப்பி வந்தபின் தஞ்சம் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் :
ஒருவர் அரசியல் ரீதியான வழக்குத் தொடர்புகட்குப் பயந்து தமது நாட்டைவிட்டு மேற்கு ஜேர்மனிக்குத் தப்பிவந்து மேற்கு ஜேர்மனியிலும் அரசியல் ரீதியான செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதாக உறுதிப்படுத்துவாரானால் அது அவரின் தஞ்ச விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பெரிதும் உதவி புரிவதாக இருக்கும். ( இதற்கு நேரடியான உதாரணம் : மேற்கு ஜேர்மனியில் ஒருவர் தமது அரசாங்கத்தின் தூதுவராலயத்தின் எதிரே தமது அரசாங்கத்திற்கு எதிராக ஊர்வலம் நடாத்தி அதன்போது அவர் தூதுவராலயத்தினரால் புகைப்படம் எடுக்கப்பட்டிருத்தல் )

- எவராவது ஒருவர் தஞ்சம் பெறக்கூடிய வேறோர் நாடொன்றில் தங்கியிருந்துவிட்டு மேற்கு ஜேர்மனிக்குள் வந்திருந்தால் அவருக்கு மேற்கு ஜேர்மனியில் தஞ்சம் வழங்கப்பட மாட்டாது. உதாரணமாக ஏதாவது நாடொன்றில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து அந்நாட்டில் வழக்குத் தொடரப்படாமலோ அல்லது நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரப்படாமலோ இருந்தபோதும் அந்நாட்டிலிருந்து வெளியேறி மேற்கு ஜேர்மனிக்குள் வந்திருந்தாரானால் அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

- விண்ணப்பதாரி ஒருவர் பொருளாதாரக் காரணங்களுக்காக அல்லது அவசர நிலைமைகளுக்காக அல்லது போரின் நிமித்தம் தமது நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என " தெளிவாகும் " பட்சத்தில் அவரது விண்ணப்பமானது " தெளிவாக உறுதிப்படுத்தப்படாதது " என்ற அடிப்படையில் நிராகரிக்கப்படும்.

- சமஷ்டிக் காரியாலயத்தினால் அல்லது நிர்வாக நீதிமன்றத்தினால் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படும் போது அவரை ஏற்றுக்கொண்டதற்கான அந்த முடிவிற்கு எதிராக முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும் விண்ணப்பதாரர் கூட்டு முகாமில் வசித்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடு நீக்கப்படும்.

அப்படியான ஒருவர் தாமே தனக்கென இருப்பிடம் ஒன்றைத் தேடிக்கொள்ளலாம் அல்லது ஏனைய உறவினருடன் கூடி வசிக்கலாம். ஆனால் சட்டரீதியாக பூர்வமாகத் தனக்கு வசிப்பிடம் தேடித்தரும்படி கோருவதற்கு அவருக்கு அருகதையில்லை. ( உதாரணமாக தனக்கு வீடு தரும்படி அவர் வீட்டு வாரியத்தில் கட்டாயப்படுத்திக் கேட்க முடியாது )

- சமஷ்டிக் காரியாலயத்தினால் அல்லது நிர்வாக நீதிமன்றத்தினால் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் அவரை ஏற்றுக்கொண்டதற்கான அந்த முடிவிற்கெதிராக முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும் முன் அனுமதியொன்றைப் பெறாமலேயே அந்நபர் தாம் வசிக்கும் பகுதியையோ அன்றில் மாவட்-

டத்தையோவிட்டு வெளியேறி மேற்கு ஜேர்மனிக்குள் வேறு இடங்களுக்குப் போகவோ முடியும்.

<u>வேலைவாய்ப்புச் சட்டத்தின் புதிய ஒழுங்கு விதிகள்;</u>

தஞ்சம் கோரும் ஒருவர் முறைப்படி 5 வருடங்களின் பின்னரே வேலைசெய்வதற்கான அனுமதியைப் பெறமுடியும். நாட்டைவிட்டு வெளியகற்ற முடியாதவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ள தஞ்சம் கோருபவர்களைப் பொறுத்தவரையில் ( உதாரணமாக கம்யூனிஸ்ட் அல்லது சர்வாதிகார நாடுகளிலிருந்து வருபவர்கள் ) இப்படி காத்திருப்பதற்கான கால எல்லை ஒரு வருடமாகும்.

சமஷ்டிக் காரியாலயத்தினால் அல்லது நிர்வாக நீதிமன்றத்தினால் விண்ணப்பதாரர் ஒருவர் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், அவரை ஏற்றுக்கொண்டதற்கான அந்த முடிவிற்கெதிராக முறையீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ்விண்ணப்பதாரர் வேலைசெய்வதற்கான அனுமதிக்காக காத்திருப்பதற்கான கால எல்லை முடிவடைகிறது.

எப்படியாயினும் ஒருவருக்கு வேலை வழங்கப்படுமுன்னர் முன்னுரிமையுடன் இருக்கும் விண்ணப்பதாரி ஒருவருக்கு ( உதாரணமாக ஐரோப்பாவைச்சேர்ந்த வெளிநாட்டவர் ) வேலை வழங்குவதில் முன்னுரிமை கொடுத்த பின்னர் எஞ்சியிருக்கும் வேலையே சாதாரண விண்ணப்பதாரியொருவருக்கு வழங்கப்படும்.

<u>பிரயாண அறிமுக அட்டைகளுடன் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அனைவருக்கும் பின்வருவன செல்லுபடியாகும் :</u>

தஞ்ச முறையானது சாதாரணமாக விண்ணப்பிக்கும் நாள்முதல் முடிவெடுக்கப்படும் நாள்வரை கிட்டத்தட்ட 14 மாதங்கள் வரை நீடிக்கும். ( ஏனெனில்; வழக்குத் தொடர்புகளின் அபாயமான <u>உறுதிப்படுத்தப்படும்</u> போது மட்டுமே எந்த வகையான பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்கு அண்ணளவாக 3 மாதங்கள்வரை எடுக்கலாம்.).

விண்ணப்பதாரி ஒருவர் செல்லுபடியான வசிப்பிட அனுமதியைக் கொண்டிராத பட்சத்தில் நகர பகுதி வெளிநாட்டவர் காரியாலயத்தில் விண்ணப்பித்து அதனைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தஞ்ச நடைமுறை முடிவடையும் காலவரையில் வசிப்பிடத்திற்கான அனுமதி வழங்கப்பட்டு நடக்கவிருக்கும் முடிவை எதிர்நோக்கி காத்திருத்தல் வேண்டும்.

தஞ்ச நடைமுறைக் காலத்தின்போது அநேகமாகப் பொருட்களின் வடிவத்திலேயே சமூக உதவி வழங்கப்படும்.

<u>தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் பின்வருவனவற்றிற்கு உரித்துடையவராகின்றார்.</u>

- அகதிகட்கான ஜெனீவா உடன்படிக்கையின் படியான பிரயாண அடையாள அட்டை;



அவர், ஜெனீவா அகதிகள் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ள நாடுகளான சகல ஐரோப்பிய நாடுகளுக்கும் " <u>விசாவைப் பெறாமலே</u> " 3 மாதங்கள் வரை பிரயாணம் செய்யலாம்.

- காலவரையற்ற வசிப்பிட அனுமதி.
- எல்லைகுறிக்கப்படாத வேலை செய்வதற்கான அனுமதி.

தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் சொந்தத் தொழில் ஒன்றை ஆரம்பித்து நடாத்த முடியும்.
தஞ்சம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருவர் வேறு முறைகளிலும் அரசாங்கத்தின் உதவிகளைப் பெறலாம்.
( உதாரணம் : ஒன்று சேர்வதற்கான பண உதவி, மேற்படிப்பிற்கான பண உதவி ;வேலையற்றோருக்கான பண உதவி ).

## Wohlfahrtsverbände

Arbeiterwohlfahrt Bundesverband e.V.
Oppelner Str. 130
5300 BONN 1

Deutscher Caritasverband e.V.
Karlstr. 40
7800 FREIBURG

Deutscher Paritätischer Wohlfahrtsverband
Heinrich-Hoffmann-Str. 3
6000 FRANKFURT 71

Deutsches Rotes Kreuz
Generalsekretariat
Friedrich-Ebert-Allee 71
5300 BONN 1

Diakonisches Werk der EKD
Stafflenbergstr. 76
7000 STUTTGART

Zentralwohlfahrtsstelle der Juden
in Deutschland e.V.
Hebelstr. 6
6000 FRANKFURT

Beratungsstellen der Arbeiterwohlfahrt für ausländische Flüchtlinge

---

Wohnheim für ausländische Flüchtlinge
Leonorenstr. 17-33
1000 BERLIN 46 Tel.: 0 30/3 75 42 61

Beratungsstelle für ausländische Flüchtlinge
Eisenacher Str. 78
1000 BERLIN 62 Tel.: 0 30/7 82 75 63

Zentrale Beratungsstelle für Asylbewerber
Nernstweg 32
2000 HAMBURG 13 Tel.: 0 40/39 11 28

Beratungsstelle für ausländische Flüchtlinge
Zehntland 16 d
2100 HAMBURG 90 Tel.: 0 40/77 57 67

Beratungsstelle für ausländische Flüchtlinge
Teichstr. 6
2160 STADE Tel.: 0 41 41/6 81 91

Wohnheim für ausländische Flüchtlinge
Kabelhorst
2432 LENSAHN Tel.: 0 43 63/35 46

Beratungsstelle für ausländische Flüchtlinge
Langenstr. 35
2800 BREMEN Tel.: 04 21/3 97-92 64

Beratungsstelle für ausländische Flüchtlinge
Breitestr. 6
2880 BRAKE Tel.: 0 44 01/37 60

Beratungsstelle für ausländische Flüchtlinge
Plaatweg 1
2890 NORDENHAM Tel.: 0 47 31/2 14 74

Beratungsstelle für ausländische Flüchtlinge
Bahnhofstr. 23
2900 OLDENBURG Tel.: 04 01/2 76 26
04 41/1 62 36



Beratungsstelle für ausländische Flüchtlinge
Hauptstr. 21
2904 KIRCHHATTEN Tel.: 0 44 82/15 03

Beratungsstelle für ausländische Flüchtlinge
Arbeiterwohlfahrt Kreisverband Friesland
Anton-Günther-Str. 26
2942 JEVER Tel.: 0 44 61/41 01

Wohnheim für Flüchtlinge
Haltenhofstr. 181
3000 HANNOVER 21 Tel.: 05 11/71 26 40

Beratungsstelle für ausländische Flüchtlinge
Arbeiterwohlfahrt Ortsverein Neustadt
Wunstdorferstr. 2
3057 NEUSTADT 1 Tel.: 0 05 32/34 78

Beratungsstelle für ausländische Flüchtlinge
Rathauspassage 4
3060 STADTHAGEN Tel.: 0 57 21/50 44

Beratungsstelle für ausländische Flüchtlinge
Obere Karspue 16
3400 GÖTTINGEN Tel.: 05 51/5 77 39

Wohnheim für ausländische Flüchtlinge
Wahlburgerstr. 32
3430 WITZENHAUSEN Tel.: 0 55 42/7 16 15

Wohnheim für ausländische Flüchtlinge
Leuchtbergstr. 10 b
3440 ESCHWEGE Tel.: 0 56 51/3 10 86

Wohnheim für ausländische Flüchtlinge
Erzberger Str. 40
3500 KASSEL Tel.: 05 61/1 25 01

Beratungsstelle für ausländische Flüchtlinge
Ostring 9
4130 MOERS 1 Tel.: 0 28 41/2 52 21

Beratungsstelle für ausländische Flüchtlinge
Gelderstr. 50
4134 RHEINBERG 1 Tel.: 0 28 43/12 03

Beratungsstelle für ausländische Familien
Kaiserring 12-14
4230 WESEL Tel.: 02 81/2 20 18/19

Beratungsstelle für ausländische Flüchtlinge
Pferdemarkt 5
4300 ESSEN 1 Tel.: 02 01/18 97-1 20/43

Beratungsstelle für ausländische Flüchtlinge
Baderweg 74
4300 ESSEN 15 Tel.: 02 01/46 66 20

Beratungsstelle für ausländische Flüchtlinge
Theißingstr. 17
4400 MÜNSTER Tel.: 02 51/5 37 17

Wohnheim für Flüchtlinge "Haus Arche"
Niedersachsenstr. 1-5
4550 BRAMSCHE Tel.: 0 54 61/6 41 77/8

Beratungsstelle für ausländische Flüchtlinge
Lipper Tor 11
4780 LIPPSTADT Tel.: 0 2941/30 17/18

Beratungsstelle für ausländische Flüchtlinge
Ausländerzentrum
August-Bebel-Str. 74
4800 BIELEFELD 1 Tel.: 05 21/6 41 72

Beratungsstelle für ausländische Flüchtlinge
Böhmerstr. 11
5800 HAGEN Tel.: 0 23 31/3 81-14

Beratungsstelle für ausländische Flüchtlinge
Arbeiterwohlfahrt Kreisverband Ennepe-Ruhr
Neustr. 10
5820 GEVELSBERG Tel.: 0 23 32/20 83



Überregionale Beratungsstelle für ausländische Flüchtlinge
Gutleutstr. 94, -Hinterhaus-
6000 FRANKFURT 1 Tel.: 0 69/23 24 58/59

Lateinamerikanisches Zentrum
Gutleutstr. 94. -Hinterhaus-
6000 FRANKFURT 1 Tel.: 0 69/23 52 95

Übergangswohnheim für ausländische Flüchtlinge
Geringshof
6405 NEUHOF 5 Tel.: 0 66 55/20 33

Wohnheim für ausländische Flüchtlinge
Hersfelderstr. 4
6440 BEBRA Tel.: 0 66 22/55 56

Beratungsstelle für ausländische Flüchtlinge
Finkenweg 5
6798 KUSEL Tel.: 0 63 81/39 39

Beratungsstelle für ausländische Flüchtlinge
Wormser Str. 16
6802 LADENBURG Tel.: 0 62 03/50 88

Beratungsstelle für ausländische Flüchtlinge
Am Sonnenrain 1
6950 MOSBACH Tel.: 0 62 61/56 46

Beratungsstelle für ausländische Flüchtlinge
Tübinger Str. 71
7000 STUTTGART 1 Tel.: 07 11/6 49 27 73

Beratungsstelle für ausländische Flüchtlinge
Dobelstr. 7
7000 STUTTGART 1 Tel.: 07 11/2 10 61-70

Beratungsstelle für ausländische Flüchtlinge
Karlsvorstadt 38
7110 ÖHRINGEN Tel.: 0 79 41/3 34 63

Sozialdienst für ausländische Flüchtlinge
Mohrenstr. 9
7170 SCHWÄBISCH HALL Tel.: 07 91/62 66

Sozialdienst für ausländische Flüchtlinge
Schmale Str. 10
7180 CRAILSHEIM Tel.: 0 79 51/57 20

Sozialdienst für Asylbewerber im staatlichen Ausländerwohnheim
Rennstr. 8-10
7300 ESSLINGEN Tel.: 07 11/31 82 74

Sozialdienst für ausländische Flüchtlinge
Kirchheimer Str. 101
7314 WERNAU Tel.: 0 71 53/3 80 21

Überregionale Beratungsstelle für ausländische Flüchtlinge
Gartenstr. 41
7500 KARLSRUHE 1 Tel.: 07 21/84 59 69

Beratungsstelle für ausländische Flüchtlinge/Überganswohnheim
Altvaterstr. 26
7630 LAHR Tel.: 0 78 21/2 39 02

Beratungsstelle für ausländische Flüchtlinge
Schiedgasse 22
7888 RHEINFELDEN Tel.: 0 76 23/36 48

Beratungsstelle für ausländische Flüchtlinge
Am Schloßplatz 1
Postfach 4
8015 MARKT SCHWABEN Tel.: 0 81 21/4 19 19

Sozialdienst für ausländische Flüchtlinge
Höllengasse 15
8390 PASSAU Tel.: 08 51/3 56 95

Beratungsstelle für ausländische Flüchtlinge
Proviantbachstr. 10
8900 AUGSBURG Tel.: 08 21/55 12 14